Registered as a Newspaper

B.A. வகுப்பு
பொருளியல்
S. வரதராஜன்
ஆரம்பம்: 14-02-1987
சனி 8-00 a.m.
BECON
156/3 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(ஸ்ரீதர் சினிமா முன்பாக)

# உதயன்

விலை: ரூ 1-25

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

B.A வகுப்பு
பொருளியல்
S. வரதராஜன்
ஆரம்பம்: 14-02-1987
சனி 8-00 a.m.
BECON
156/3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(ஸ்ரீதர் சினிமா முன்பாக)

அடர்: 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஸ்ரீ தை மீ 30 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1407 ஜமா ஆகிர் பிறை 13 (12-02-1987) UTHAYAM A LIVELY TAMIL DAILY இதழ் 66

பரந்தனில் வைத்து -- கொழும்பில் இருந்து வந்த

# பயணிகள் பஸ் மீது இராணுவம் சூடு!

## நால்வர் கொலை; 20க்கும் மேற்பட்டோர் படுகாயம்

யாழ்ப்பாணம், பெப். 12

கொழும்பில் இருந்து வந்த தனியார் பஸ் ஒன்றின்மீது பரந்தனில் வைத்து இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் சாரதி உட்பட நால்வர் கொல்லப்பட்டனர்.

இருபதுக்கும் அதிகமானோர் படுகாயமடைந்த நிலையில் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளனர். அவர்களில் பலரது நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் தெரிய வருகிறது.

நேற்று முற்பகல் நடந்த இச்சம்பவம் குறித்துத்தெரியவருவதாவது:

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த தனியார் பஸ் ஒன்று வவுனியாவில் இருந்து முல்லைத்திவு ஊடாக பரந்தன் நோக்கி நேற்றுக்காலை வந்து கொண்டிருந்தது.

அந்த பஸ்ஸில் நூற்றுக்கும் அதிகமான பயணிகள் பயணம் செய்தனர்.

பரந்தன் சந்தியை பஸ் அண்மித்ததும் பரந்தன் மக்கள் வங்கிக் கட்டடத்தில் இருந்த சிப்பாய்கள் பஸ்ஸை நோக்கி சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதன் காரணமாக சாரதி உட்பட நால்வர் கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்டவர்களில் ஒருவர் பெண் எனவும் அறியவந்தது.

இருபதுக்கும் அதிகமானவர்கள் படுகாயம் அடைந்த நிலையில் அவசர அவசரமாக அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவர்களில் பலரது நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பஸ் முழுவதிலும் துப்பாக்கிச் சன்னங்கள் துளைத்த அடையாளங்கள் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் அந்த பஸ்ஸில் வந்த சில பயணிகளை சிப்பாய்கள் இ. போ. ச. பஸ் மூலம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த பஸ் வண்டிக்கு

(4ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முனி



உந்தளவு நேர ஊரடங்கு என்ன ஊரை அடங்கச் செய்யவோ அல்லது ஊரை அழிச்சு அடக்கம் செய்யவோ...! இரண்டு நாளிலை வெளிக்கும்...இல்லையே!

★ கிளிநொச்சி, முல்லைத்தீவு. மன்னாரில் 36 மணி நேர ஊரடங்கு

# பரந்தனில் நேற்றும் கடும் மோதல்கள்

## இராணுவம் இரு முகாம்கள் அமைத்தது

யாழ்ப்பாணம், பெப். 12

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மூன்று மாவட்டங்களிலும் 36 மணி நேர ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ளது. நேற்று புதன்கிழமை மாலை 6 மணிக்கு ஊரடங்குச்சட்டம் அமுலுக்கு வந்தது. நாளை வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கே அது நீங்குகிறது.

கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களில் அரச படைகளுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்று வரும் மோதல்களைத் தொடர்ந்தே ஊரடங்குச் சட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது.

ஊரடங்கு ஏன்?

மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள வீதிகளில் ஏராளமான தரைக்கண்ணிகள் புதைக்கப்பட்டுள்ளன.

ஊர்மக்களுக்கு அபா

(4ஆம் பக்கம் பார்க்க)

கட்டுவன் சந்தியில்

## விடுதலைப் புலிகள் இருவர் வீரமரணம்

பலாலி, பெப். 12

நேற்று அதிகாலை 4 மணி அளவில் பலாலி முகாமில் இருந்து இராணுவத்தால் ஏவப்பட்ட மோட்டோ ஷெல் ஒன்றினால் கட்டுவன் சந்தியில் மக்களைக் காக்கும் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த போராளிகள் இருவர் வீரமரணமடைந்தனர்.

தமிழீழ விடுதலைப் புலி

(4ஆம் பக்கம் பார்க்க)

ஆனையிறவு தடை முகாமில்

## லொறிச் சாரதிக்கு துப்பாக்கிச் சூடு!

கிளிநொச்சி, பெப் 12

முகாமைக் கடந்து செல்வதற்கு முதலாவதாக லொறியை கொண்டுபோய் நிறுத்திவிட்டு காத்திருந்த பொழுது துப்பாக்கிச் சூடுகள் என்னைத் தாக்கின.

ஆனையிறவு முகாமில் நேற்று துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான லொறிச் சாரதி கோவிந்தன் கிருஷ்ணபிள்ளை இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது;

ஐந்து நாட்களுக்கு மேலாக ஆனையிறவு முகாமைத் தாண்டிச் செல்வதற்காகக் காத்திருந்தோம்.

எனது லொறி என்ஜின் இயங்க மறுத்ததன் கார

(4ஆம் பக்கம் பார்க்க)



எரிபொருள் தடையைக் கண்டித்து நேற்று யாழ்நகரில் நடத்தப்பட்ட ஊர்வலத்தின் போது எடுக்கப்பட்ட படங்கள். ஊர்வலத்தில் கலந்து கொண்ட மாட்டு வண்டி ஒன்றும் படத்தில் காணப்படுகிறது.
(படப்பிடிப்பு: ஜெயம்)

பிந்திய செய்தி

## வேறு 2 பஸ்கள் மீதும் துப்பாக்கி வேட்டுகள்

### இருவர் பலி; மூவர் படுகாயம்

யாழ்ப்பாணம், பெப். 12

வவுனியாவிலிருந்து நேற்றுக்காலை புறப்பட்ட ஹை-ஏஸ் மினிபஸ் ஒன்றின்மீது பரந்தனில்இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

இதில் பயணம் செய்த நயினாதீவைச் சேர்ந்த திருமதி மலர்ராசனி கமலநாதன்(ஆசிரிய பயிற்சி கலாசாலை கோப்பாய்), சரவணை கிழக்கைச் சேர்ந்த மரக்கறி வியாபாரி கந்தையா சுப்பிரமணியம் ஆகிய இருவரும் ஸ்தலத்திலேயே பலியானார்கள்.

திருமதி கமலநாதனின் சடலம் வவுனியாவிற்கு உறவினர்களால் எடுத்துச் செல்லப்பட்டது. சுப்பிரமணியத்தின் சடலம் தர்மபுரம் ஆஸ்பத்திரியில் அடையாளம் காண்பதற்காக ஒப்படைக்கப்பட்டது.

இப்பஸ்ஸில் பயணம் செய்த முரசுமோட்டையைச் சேர்ந்த உதயகுமார் பலத்த காயங்களுடன் யாழ் ஆஸ்

(4ஆம் பக்கம் பார்க்க)

# நகரில் நேற்று நடந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம்

யாழ்ப்பாணம், பெப். 12

யாழ் - குடாநாட்டுக்கான எரிபொருள் தடை, கடற்றொழில் தடை, ஆகியவற்றை நீக்குமாறு கோரி நேற்று மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் யாழ்நகரில் நடத்தப்பட்டது.

மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கமும், குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கமும் ஏனைய சனசமூக நிலையங்களும் ஒன்றிணைந்து இந்த ஊர்வலத்தை நடத்தின. நல்லூரில் இருந்து காலை 9 மணிக்கு புறப்பட்ட ஊர்வலமும், குருநகர் பாஷையூர் பகுதிகளில் இருந்து புறப்பட்ட ஊர்வலங்களும் காலை 10.30 மணி அளவில் ஆரியகுளம் சந்தியை அடைந்தன.

அதன் பின்னர் பலாலி வீதி வழியாக ஆஸ்பத்திரி வீதிக்கு சென்று யாழ் செயலகத்தை ஊர்வலம் அடைந்தது.

எரிபொருள் தடை

(4ஆம் பக்கம் பார்க்க)

## சைக்கிளில் சென்றோர் மீது சிப்பாய்கள் பதுங்கியிருந்து சூடு

யாழ்ப்பாணம், பெப். 12

இரு வெவ்வேறு சம்பவங்களில் முல்லைத்திவு-பரந்தன் வீதியால் சைக்கிளில் சென்றோர் மீது சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

காயமடைந்தவர்களில் ஒருவரான சின்னையா சிவதாசன் (28 வயது) பரந்தனில் இருந்து நவஜீவனம் நோக்கிப் பகல் பதினொரு மணி அளவில் சைக்கிளில் சென்று கொண்டிருந்தார்.

அப்பொழுது ஏற்கனவே அங்கு வந்து

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு சிப்பாய் பலி என்கிறது அரசு

யாழ்ப்பாணம், பெப். 12

தொண்டமானாறு இராணுவ முகாமில் இருந்து வல்வெட்டித்துறை இராணுவ முகாமுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை புறப்பட்ட சிப்பாய்களுடன் விடுதலைப் புலிகள் நடத்திய மோதலில் இராணுவ கோப்ரல் ஒருவர் கொல்லப்பட்டார் என்று அரசு அறிவித்துள்ளது.

மேலும் ஒரு சிப்பாய் காயமடைந்தார் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(இ-10)

## ஆனையிறவு தாண்டவில்லை

யாழ்ப்பாணம், பெப் 12

வெளியூர் நோக்கிப் புறப்பட்ட பஸ்கள் நேற்று ஆனையிறவுடன் யாழ்ப்பாணம் திரும்பின. சில பஸ்கள் டவுனில் தரித்து நிற்கின்றன.

ஆனையிறவு முகாமைத் தாண்டி வாகனங்கள் எதுவும் செல்வதை சிப்பாய்கள் அனுமதிக்கவில்லை. (இ-10)

# கேரதீவு - சங்குப்பிட்டி

## வாகனப் போக்குவரத்துக்கு தடை

### மீறினால் கண்ட இடத்தில் சூடு

முழங்காவில், பெப். 12

கேரதீவு- சங்குப்பிட்டி ஊடாக நடைபெற்று வந்த வாகனப் போக்குவரத்துக்கள் மறுஅறிவித்தல் வரை தடைசெய்யப்பட்டுள்ளன.

இத்தடையை மீறுவோர் கண்ட இடத்தில் சுடப்படுவர் என்று பூநகரி 4ஆம் கட்டை, வாடியடி இராணுவத்தினர் உத்தரவிட்டுள்ளனர்.

இதனால் மன்னாரில் இருந்து யாழ். நகருக்கு டீசல் வருவது தடைப்பட்டது.

நாச்சிக்குடா, கிராஞ்சி முழங்காவில் போன்ற இடங்களில்இருந்து மீன், மரக்கறி வகைகள் வருவதும் தடைப்பட்டுள்ளது.

இதுவரை ஆனையிறவில் இராணுவக் கெடுபிடி அதிகரித்ததன் காரணமாக கொழும்பில் இருந்து பொருள்களுடன் வந்த சில லொறிகள் பூநகரி, சங்குப்பிட்டி ஊடாக வள்ளத்தில் பொருள்களை ஏற்றி கேரதீவில் இருந்து மீண்டும் யாழ் கொண்டு சென்றன.

இந்தத் தடையினால் அதற்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டாயிற்று.

(இ-ஈ-ரி)

மகத்தான
திறப்பு விழா



12-02-1987
நேரம்:
12-00 மணி
ரெலி கோணர் குறூப்பின்
மற்றுமோர்
ஸ்தாபனம்
'நமோஸ்கார்'
புகைப்பட ஸ்தாபனம்
கலர், கறுப்பு - வெள்ளை
படப் பிடிப்பாளர்கள்
அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
கச்சு வீதி,
சாவகச்சேரி.

### சுபநேரம்

12-02-1987
வியாழக்கிழமை
சுபநேரம்:
8.04 முதல் 9.34வரை
ராகுகாலம்:
2.04 முதல் 3.34 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
தைப்பூசம்

ஏ.ஜே.எம்.
ரெக்ஸ்ரைல்ஸ்
ஸ்தாபனத்தாரின் மற்றுமோர்
மங்களகரமான
புதுக் கடைத் திறப்பு விழா
வாடிக்கையாளர் அனைவரின் பாராட்டைப் பெற்று வரும் யாழ். வாடிக்கையாளரின் நலன் கருதி எமது மற்றுமோர் ஸ்தாபனத்தை
நிகழும் அக்ஷய வருடம்
தைத்திங்கள் 30ஆம் நாள்
இன்று (12-02-87)
பகல் 11-00 மணி முதல் 12.00 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில்
திறந்துவைக்க நிச்சயித்துள்ளோம்.
அத்தருணம் அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
இங்ஙனம்,
ஏ. ஜே. எம். ரெக்ஸ்ரைல்ஸ் ஸ்தாபனத்தார்,
119, கஸ்தூரியார் வீதி,
147, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
Phone: 22706

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சின்னஞ் சிறு விளம்பரங்கள்**


**விற்பனைக்கு**

கோழிஇறைச்சி (புரொயிலர்ஸ்), முட்டை விற்பனைக்கு உண்டு சிமாட்டி பாம்ஸ், ஸ்ரேசன் றோட், மயிலங்காடு சுன்னாகம். சிமாட்டி பாண்ஸி யாழ்ப்பாணம்.

**காணவில்லை**

10-2-87 காலை அலுவலக கோப்புகள் (பைபில்கள்) அடங்கிய கறுப்பு தோல்பை ஒன்று வட்டுக்கோட்டை - சித்தன்கேணி-தெல்லிப்பழை வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வ. அமிர்தலிங்கம், அதிகாரி காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை, சிவில் பகுதி, காங்கேசன்துறை என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**சேவை**

மங்கள சண்டி யந்திரத்தை வழிபடுவதால் திருமணமாகாத வயது வந்த பெண்களுக்கு விரைவில் திருமணம் நடைபெறும். தாம்பத்திய உறவில் கசப்புடையோரும், குடும்பப் பிரிவுடையோரும் வழிபடலாம். இலவச விபரங்கட்கு முத்திரைக் கவர் அனுப்பிப் பெறலாம். சு. சிவஷண்முகானந்தக் குருக்கள், கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை.


## கலை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், பெப். 12

வட்டுக்கோட்டை கல்வி சமூக அபிவிருத்திச் சமூகம் அளிக்கும் கலை நிகழ்ச்சி வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாசாலையின் ஆரம்ப பிரிவுக் கட்டடத்தில் எதிர் வரும் சனிக்கிழமை மாலை நடைபெறும்.

சமூகத் தலைவர் திரு. தா. தங்கராசா தலைமை வகிப்பார்.

அதிபர் திரு. க. சிவவாகீசர் தொடக்க உரை நிகழ்த்துவார்.

மாதகல் வ. கந்தசாமி சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவார். கலை கதம்ப நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (இ-எ)

## கலாசார பேரவையின் காத்தவராயன் நூல் வெளியீடும் நாடகமும்

யாழ்ப்பாணம், பெப் 12

யாழ் மாவட்டக் கலாசாரப் பேரவை நாட்டார் கலைக் குழுவின் காத்தவராயன் நூல் வெளியீடும் காத்தவராயன் நாடக அரங்கேற்றமும் எதிர்வரும் 14 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு யாழ் பல்கலைக் கழகக் கைலாசபதி கலை அரங்கில் நடைபெறும்.

கலாசாரப் பேரவைத் தலைவரும் அரச அதிபருமான திரு. வி. எம். பஞ்சலிங்கம் தலைமை வகிப்பார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார். தலைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் வெளியீட்டுரை நிகழ்த்துவார்.

அண்ணாவியார் இ. கண. நப்பிள்ளை பொற்கிழி வழங்கி கௌரவிக்கப்படுவர்.

நெல்லியடி அம்பலத்தாடிகளும் பாசையூர் கலாமன்றமும் இணைந்து அளிக்கும் காத்தவராயன் நாடகத்தை கலாநிதி இ. பாலசுந்தரம் நெறிப்படுத்துவர். (இ-எ)

பிரிகேடியரின் அனுமதியுடன் பொருத்தப்பட்ட

# மேலதிக தாங்கிகளை உடைக்கும் சிப்பாய்கள்

## லொறிச் சங்கத் தலைவர் கவலை

யாழ்ப்பாணம், பெப். 12

வடபகுதி பிரிகேடியரின் அனுமதியுடன் லொறிகளில் பூட்டப்பட்ட மேலதிக எரிபொருள் நிரப்பும் தாங்கியை இராணுவத்தினர் ஓமந்தையில் வைத்து உடைக்கிறார்கள்.

இவ்வாறு வடமாகாண லொறிப்போக்குவரத்துச் சங்கத் தலைவர் திரு. எஸ் அழகானந்தம் தெரிவித்தார்.

சங்கப்பிரதிநிதிகள் பிரிகேடியர் ஜெரி சில்வாவை சந்தித்து மேலதிகமாக ஒரு தாங்கியை பூட்ட அனுமதி பெற்றுள்ளனர்.

இந்நிலையில் அத்தாங்கிகளில் எரிபொருள் நிரப்பிக் கொண்டு வரும் லொறிகளை ஓமந்தையில் வைத்து இராணுவத்தினர் மறித்து தாங்கியை உடைக்கின்றனர். (இ-5)

## அதிபர் துணிச்சலுக்கு தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் பாராட்டு

அச்சுவேலி, பெப் 12

கோப்பாய்க் கல்வி வட்டாரப் பாடசாலைகளை மருதனாமடம் கோட்டக் கல்வி அலுவலகத்துடன் சேர்க்க வேண்டும் என்ற தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்த 31 அதிபர்களின் துணிவு பாராட்டத்தக்கது.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க செயலாளர் திரு த. மகாசிவம் இவ்வாறு பாராட்டு தெரிவித்தார்.

கோப்பாய் வட்டாரப் பாடசாலைகளை மருதனாமடம் கோட்டக் கல்வி அலுவலகத்துடன் சேர்க்க வேண்டும் என்ற முன்னைய தீர்மானத்தை மாற்றி நெல்லியடி அலுவலகத்துடன் சேர்ப்பதற்கு இரகசிய வாக்கெடுப்பு நடைபெற்றது.

இது பற்றி கருத்து தெரிவிக்கையிலேயே திரு. த. மகாசிவம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதேசரீதியில் கோப்பாய்க்கும் மானிப்பாய் வட்டாரத்திற்கும் தொடர்பு உண்டு அத்துடன் கோப்பாய் வட்டாரம் சேர்க்கப்படாவிடில் மருதனாமடத்தில் கோட்டக்கல்வி அலுவலகம் அமைய மாட்டாது. இதன் மூலம் யாழ்ப்பாணத்தில் செயற்பட வேண்டிய கோட்ட அலுவலகத்தின் தொகை மூன்றாகக் குறைந்திருக்கும் என திரு மகாசிவம் தெரிவித்தார். (இ-11)

**மக்கள் முகம்**

## புங்குடுதீவு திருச்சபை உத்தியோகத்தர்

புங்குடுதீவு, பெப் 12

புங்குடுதீவுத் திருச்சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் சேகரர் அருள்திரு ஜெயக்குமார் தலைமையில் ஊழியன் திரு. வி இராஜகுமாரின் ஜெபத்துடன் ஆரம்பமாகியது.

ஏறக்குறைய 30 அங்கத்தவர்கள் பங்குபற்றினார்கள்-

பின்வரும் உத்தியோகத்தர்கள் தெரிவு நடைபெற்றது

பொருளாளர் திரு ஜே சி செவேராசா, செயலாளர் செல்வி சத்தியா முருகேசு, மாதர் சங்கத் தலைவி திருமதி சற்குணராசா, ஒய்வு நாட் பாடசாலைத் தலைவி திருமதி ஏ. முருகேசு, வாலிபர் சங்கத் தலைவி செல்வி பி சற்குணராசா

வேலணைச்சபை திருமதி வள்ளியம்மை, திருமதி த. கமலரத்தினம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (இ:131)

**விளையாட்டரங்கு**

## சென்.ஜோன்ஸ் யாழ் வளாக 'ஏ' அணிகள் வெற்றி

யாழ்ப்பாணம், பெப் 12

ஷப்ரு யுனிக்கோ நிதி நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ் வை எம் சி ஏ நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் மூன்றும் நாள் ஆட்டம் கடந்த செவ்வாய் இடம் பெற்றது.

முதலாவது மோதலில் சென் ஜோன்ஸ் அணி ஒரு மேலதிக புள்ளியினால் கிறீன் பீல்ட் அணியைத் தோற்கடித்தது.

சென் ஜோன்ஸ் அணி 34 புள்ளிகளையும் கிறீன் பீல்ட் அணி 33 புள்ளிகளையும் எடுத்தன.

இரண்டாவது மோதலில் யாழ் வளாக 'ஏ' பிரிவு அணி 46 மேலதிக புள்ளிகளினால் சென் ஜோன்ஸ் பி" அணியைத் தோற்கடித்தது வளாக 'ஏ' அணி 79 புள்ளிகளைப் பெற்றது சென் ஜோன்ஸ் பி, அணி 33 புள்ளிகளைப் பெற்றது.

டாக்டர் விஜயகமூர்த்தி, திரு. கே டபிள்யு விமலராசா, திரு ஜே என் பொன்னையா ஆகியோர் மத்தியஸ்தர்களாகப் பணி புரிந்தனர். (இ-எ)

## சிக்கோ டிஸ்கோ சம்பியனாகியது

சுன்னாகம், பெப். 12

உடுவில் ஸ்போட்ஸ் விரார் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட ஏழு பேர் கொண்ட "நொக்கவுட்" உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கந்தரோடை சிக்கோ டிஸ்கோ விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

சுன்னாகம் சிங்கமாப்பாணர் அரங்கில் நடந்த இறுதிப் போட்டியில் சிக்கோ டிஸ்கோ விளையாட்டுக் கழகத்துடன் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் மோதியது.

இடைவேளைவரை இரு கழகங்களும் சிறப்பாக விளையாடி 1—1 கோல்கள் என்ற எண்ணிக்கையுடன் சமமாகஇருந்தன.

இடைவேளையின் பின் பல சந்தர்ப்பங்கள் றோயல் கழகத்திற்குக் கிடைத்த போதிலும் சிக்கோ டிஸ்கோ கோல் பாதுகாப்பாளர் சுரேஷ்குமார் சிறப்பாக பந்தை தடுத்தமையால் ரசிகர்களின் பாராட்டுதல்களைப் பெற்றார்.

போட்டி முடிவடைய 7 நிமிடங்கள் இருக்கும் போது - சிக்கோடிஸ்கோ தனது இரண்டாவது கோலைப் போட்டதால் 2-1 கோல்களால் சிக்கோ டிஸ்கோ றோயல் கழகத்தை தோற்கடித்து சம்பியன் கேடயத்தை தனதாக்கியது.

உரும்பராய் பிரதேச அமைப்பாளர் திரு. சுரேஸ் வெற்றி பெற்றோருக்கு பரிசில்களை வழங்கினார்.

சம்பியன் போட்டிக்கு மத்தியஸ்தராக திரு துரைசிங்கம் கடமை பார்த்தார். (இ-27)

யாழ் இந்துக்கல்லூரி

## தேசியக் கல்லூரியாக தரம் உயர்த்தப்பட்டது பெருமைக்குரியதே

யாழ்ப்பாணம், பெப், 12

நூற்றாண்டு நிறைவை அமைந்துள்ள நேரத்தில் யாழ் இந்துக்கல்லூரி தேசியக் கல்லூரியாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளமை பெருமைக்குரியதே.

கல்லூரி அதிபர் திரு. ச பொன்னம்பலம் இவ்வாறு கூறினார்.

திங்கட்கிழமை நடைபெற்ற யாழ்ப்பாண இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்க கூட்டத்திற்கு தலைமை வகித்து அவர் பேசினார்.

அவர் மேலும் பேசுகையில் இந்த நாட்டில் 18 பாடசாலைகள் தேசிய பாடசாலைகள் என்ற தரத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளன.

தமிழ்ப் பகுதி கல்வி - வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட இரு கல்லூரிகள் மட்டுமே இத்தரத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளன.

இதில் யாழ் இந்துக் கல்லூரி மட்டுமே ஆண்கள் கல்லூரி ஆகும்.

தேசியக் கல்லூரி என்ற தகுதியைப் பெறுவதற்கு எமது கடந்த காலச் செயற்பாடுகள் உரமாகியுள்ளன.

அதனையிட்டு நாமனைவரும் பெருமையடைவோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

சங்கச் செயலாளர் திரு. இ. சங்கர் செயலறிக்கையை இக்கூட்டத்தில் வாசித்து உரையாற்றினார் (இ-5)


## பிரயாண ஒழுங்குகள்

● ஓமான் ● குவைத் ● சவூதி

ஆகிய நாடுகளுக்கான தொழில் வாய்ப்புடன் செல்ல விரும்புவோர் உடன் எம்மிடம் தொடர்பு கொள்ளவும்

கடிதமூலம் தொடர்பு கொள்வோர் முத்திரை ஒட்டிய கவருடன் தொடர்பு கொள்ளவும்

எமது முகவர் நிலையத்தினூடாக பயணம் மேற்கொள்வோரின் பெயர் விபரங்களை வாரந்தோறும் வெளியிடுகிறோம் எமக்கு வட பகுதியில் வேறு கிளைகள் கிடையாது

உங்கள் (PASSPORT) கடவுச் சீட்டுக்கள் குறித்த தவணையில் குறைந்த செலவில் செய்து தரப்படும் எம்மிடம் (PASSPORT) விண்ணப்பப் படிவமும் எல்லா நாட்டிற்கான சகலவிதமான முத்திரைகளும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ் முகவரி:
A. பத்மதாஸ்
மதுரா வீடியோ கிளப்,
இல 96, 4-ம் குறுக்குத் தெரு,
சின்னக்கடை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23549

கொழும்பு முகவரி:
HORIZON ENTERPRISES
No 87 2/1, Kollupittiya Lane,
Kollupittiya, COLOMBO-3.
T-phone: 574000


# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

## ஊரெழுவில் ஒன்று கூடல் நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், பெப். 12

சமூக சிந்தனையாளர் ஒன்று கூடல் நிகழ்ச்சி 14 ஆம் திகதி சனிக்கிழமை ஊரெழு மதி அக்கடமியில் நடைபெறவுள்ளது.

கலாநிதி நா சுப்பிரமணிய ஐயர் தலைமையில் நடைபெறும் இந்த ஒன்று கூடல் நிகழ்ச்சியில் 'தமிழில் ஈழமக்கடன்' பற்றிய சிந்தனை இடம் பெறும்.

விரிவுரையாளர் என். சண்முகலிங்கம், புலவர் பார்வதிநாதசிவம், அண்ணா இராஜேந்திரன், வேல் அமிர்தன். மா. குலமணி ஆகியோர் ஒன்று கூடலில் உரை நிகழ்த்துவர். (இ-5)

எழுத்தாளர்கள் நூல்களை வெளியிட

## பத்திரிகை நிறுவனங்கள் உதவவேண்டும்

### செங்கை ஆழியான் சொல்கிறார்

யாழ்ப்பாணம், பெப் 12

இலைமறை காயாக உள்ள எழுத்தாளர்களின் நூல்களை வெளியிட பத்திரிகை நிறுவனம் உதவ வேண்டும்.

சஞ்சீவி வார இதழில் வெளிவந்த முதல் குறுநாவலான "சிறைப்பறவைகள்" நூல் வெளியீட்டு விழாவில் திரு செங்கையாழியான் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

கொக்குவில் இந்துக் கல்லூரியில்நடந்த வெளியீட்டு விழாவிற்கு உதயன் - சஞ்சீவி பத்திரிகை நிறுவன பொது முகாமையாளர் திரு. க. திருச்சிற்றம்பலம் தலைமை வகித்தார்.

உதயன் - சஞ்சீவி பத்திரிகை நிறுவனம், ஷப்ரு நிதி நிறுவனம் ஆகியவற்றின் நிர்வாக இயக்குநர் திரு ஈ சரவணபவனும் திருமதி யசோதை சரவணபவனும் நூலின் முதற் பிரதியை உதயன்-சஞ்சீவி பிரதம ஆசிரியர் திரு. ம. வ. கானமயில்நாதனிடம் இருந்து பெற்றுக்கொண்டார்கள்.

திரு. செங்கை ஆழியான் தனது பேச்சில் தொடர்ந்து கூறியதாவது:-

நவீன ஈழத்துஇலக்கிய வரலாற்றில் புதிய இலக்கிய நெறி உருவாகி வருகிறது. இலங்கையர்கோன் முதலானோர்முன் வைத்த மண்வாசனை, யதார்த்தக் கருத்துக்களுடன் 1980ஆம் ஆண்டின் பின்னர் சமகாலப் பிரச்சினைகளைப் படைப்புக்கள் பிரதிபலிக்கும் இலக்கியப் போக்கு உருவாகி உள்ளது.

'சிறைப்பறவைகள்' குறுநாவல்ஆசிரியர் திரு. து வைத்திலிங்கம் தனது படைப்பிலே சமகால பிரச்சினையைத் தொடும் அதேவேளையில் பெண்ணினத்தின் பிரச்சினைகளையும் ஆராய்கிறார்.

சீதனப் பிரச்சினையால் மட்டும் ஒரு பெண்ணுடைய திருமணம் தடைப்படுவதில்லை. வேறு காரணிகளும் உண்டு. அவற்றில் ஒன்றைச் சிறைப் பறவைகள் படம் பிடித்துக் காட்டுகின்றன -என்றார்.

திரு புதுறொளி தமது உரையில் குறிப்பிட்டதாவது:-

திரு து.வைத்திலிங்கம் எண்பதுக்கு மேற்பட்ட சிறுகதைகள், இரண்டு குறுநாவல்கள் இரு கவிதைகள் என்று பல படைப்புக்களை எமக்கு நெடுங்காலமாகத் தருபவர்.

இன்றைய சிறுகதைகள் சமகாலப் பிரச்சினையைத் தொடுவதுடன் கலையம்சம் மிளிர வெளியாகின்றன. இது நல்ல, நம்பிக்கை தரும் செய்தியாகும் - என்றார்

திரு க திருச்சிற்றம்பலம் தமது தலைமையுரையில் பின்வருமாறு கூறினார்:-

எழுத்தாளர்கள் தமது இலக்கியப் படைப்புகள் மூலம் சமுதாயத்தை நல்வழிப்படுத்த வேண்டும் நல்ல ஆரோக்கியமான கருத்துக்களை வழங்கும் எழுத்தாளர்கள் அக்கருத்துக்களைத் தாமும் தமது வாழ்விலே கடைப்பிடிக்க வேண்டும்.

எழுத்தாளர்கள் நல்ல உதாரண புருஷர்களாக விளங்க வேண்டும். உண்மையை உண்மையாக எடுத்துச் சொல்லும் பண்பு எழுத்தாளர்களிடம் காணப்பட வேண்டும் - என்றார்.

நாவலாசிரியர் திரு. து. வைத்திலிங்கம் தனது பதிலுரையில் பின்வருமாறு கூறினார்:-

"தமிழ் இலக்கியத்தில் எனக்குள்ள தணியாத தாகம் காரணமாக 1965 ஆம் ஆண்டு தொட்டு கதைகளைப் படைத்து வருகிறேன்.

உத்தியோக வாழ்வில் நான் சந்தித்த மனிதர்கள், சம்பவங்கள் என்னிடம் ஏற்படுத்திய பாதிப்புகள் எனது கதைகளின் கருப்பொருளாகும். ஏனைய படைப்புகள் நூலாக வெளிவரக் காலம் இன்னும் கனிய வேண்டும்" — என்றார்.

யாழ் செயலக தலைமை உதவி அரசாங்க அதிபர் திரு கோபாலரத்தினம் ஆசியுரை வழங்கினார். (இ-9)

இலங்கைத் தமிழர் பிரச்சினையில்

## தமிழக பத்திரிகைகள் எப்படி நடந்துகொள்ள வேண்டும்?

### சிதம்பரம் விளக்குகிறார்

சென்னை, பெப். 11

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமிழ் நாட்டுப் பத்திரிகைகள் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?

இணை அமைச்சர் ப. சிதம்பரம் சென்னை செய்தியாளர்கள் மத்தியில் இதற்கான விளக்கத்தை வெளியிட்டார்.

அவர் சொன்னதாவது;

பத்திரிகையின் பலம் மிக வலிமையானது. இலங்கைப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் நான்கு விதமான கருத்துக்களைக் கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது.

போராளிகளின் கருத்து, இலங்கை அரசின் கருத்து, மத்திய மாநில அரசுகளின் கருத்து, மற்றும் தமிழகப் பத்திரிகைகளின் கருத்து!

இவை நான்கும் ஒத்துப் போகும் கருத்து எது எனப் பார்த்துத் தான் செயல்பட வேண்டியுள்ளது.

அதாவது பேச்சுவார்த்தை சுமுகமான சூழ்நிலையில் போய்க் கொண்டு இருக்கையில், தமிழகப் பத்திரிகையில் வரும் செய்தி ஒன்று சூழ்நிலையையே மாற்றி விடுகிறது. இது நான் ஊகம் பண்ணிச் சொல்லவில்லை. நிஜமாகவே நடந்தது.

எனவே எந்தப் பிரச்சினையை எடுத்துக் கொண்டாலும் சற்று யோசித்து சம்பந்தப்பட்டவர்களின் அபிப்பிராயங்களையும் அறிந்து விட்டுப் பிரசுரியுங்கள்.

இதை ஓர் அமைச்சராக மாத்திரம் இல்லை சக பத்திரிகையாளன் - முன்னாள் பத்திரிகையாளன் என்ற முறையிலும் ஒரு வேண்டுகோளாகக் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படி இணை அமைச்சர் சொன்னார். (இ-ஐ-எ)

## தீவுப்பகுதிக்கு சடாட்சரசண்முகதாஸ்

புங்குடுதீவு, பெப் 12

தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபராக திரு சி சடாட்சர சண்முகதாஸ் கடந்த வார இறுதியில்கடமைப் பொறுப்பேற்றார்.

தீவுப்பகுதி தெற்கு உதவி அரச அதிபராக முன்னர் பணியாற்றிய திரு. ... [illegible] ... அதிபராக இடமாற்றம் பெற்றுள்ளார். (இ-131)

## புலமைப்பரிசில் நிதி வழங்கும் வைபவம்

யாழ்ப்பாணம், பெப். 12

காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா ம. ம. வித்தியாலய ஜீ. சி. ஈ. (உயர்தரம்) பரீட்சையில் முதற்புள்ளி பெற்றவருக்குரிய புலமைப் பரிசில் நிதி வழங்கும் வைபவம் 16 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும்.

வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

செல்வி நந்தினி நடராசாவே புலமைப் பரிசில் பெறும் மாணவி ஆவார்.

சைவமணி, சொல்லாநிதி சித்தாந்தச் செம்மல் விதுவான் ... [illegible] ... இப்புலமைப் பரிசில் வழங்கப்படுகிறது. (இ-5)

## கெருடாவில் பகுதி மக்களுக்கு உதவி

வல்வெட்டித்துறை, பெப். 12

கெருடாவில் பகுதி மக்களுக்கான நிவாரண உதவிகள்வழங்குவதற்கான தீவிர நடவடிக்கைகளை வல்வை பிரஜைகள் குழு எடுத்து வருகிறது.

இதற்காக அரசஅதிபருடனும், புனர்வாழ்வு அமைச்சின் அதிகாரிகளுடனும் தொடர்பு கொண்டுள்ளனர். (இ-160)

## சைவபரிபாலன சபை பண்ணிசைப்போட்டி முடிவு

வட்டுக்கோட்டை, பெப். 12

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினரால் ஆண்டு தோறும் நடத்தப்படும் யாழ் மாவட்டப் பண்ணிசைப் போட்டி இம்மாதம் 4 ஆம் திகதி புதன்கிழமை நடத்தப்பட்டது

போட்டியில் பரிசு பெற்றோர் விபரம் பின்வருமாறு

**மேற்பிரிவு**

முதலாம் இடம் செல்வி ப. சுஜாதா (யா/இந்து மகளிர் கல்லூரி)

இரண்டாம் இடம் செல்வன் இ. குகானந்தம் (யா/இந்துக்கல்லூரி)

மூன்றும் இடம் செல்வி கு. நீதிமதி (யா/தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி)

**மத்திய பிரிவு**

முதலாம் இடம்: செல்வி மு சுபாஜினி (யா/இந்து மகளிர் கல்லூரி)

இரண்டாம்இடம்: செல்வி ப. அபிராம சௌந்தரி (யா/இராமநாதன் கல்லூரி)

மூன்றும் இடம்: செல்வி சி. சிவரதி (யா/தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி)

**கீழ்ப்பிரிவு**

முதலாம் இடம் செல்வி க. சுவர்ணநிதி (யா/இந்து மகளிர் கல்லூரி)

இரண்டாம் இடம் செல்வி இ. சஜீனி (மானிப்பாய் இந்துசமய அபிவிருத்திச் சங்கம்)

மூன்றும் இடம் செல்வி செ. திரியம்பகி (வட்டுக்கோட்டை ஆத்தியடிப் பிள்ளையார் கோவில்)

இப்போட்டியில் வெற்றி பெறுவோருக்கான பரிசில்கள் இம்மாதம் 19 ஆம் திகதி வியாழக்கிழமை நாவலர் மண்டபத்தில் நடைபெறவிருக்கும் புண்ணிய நாச்சி அம்மையார் தினத்தில் வழங்கப்படும்.

சைவ பரிபாலன சபையின் கௌரவ பரீட்சைச் செயலாளர் சைவப் புலவர் திரு வ. கந்தசாமி ஆசிரியர் இதனைத் தெரிவித்தார். (இ-161)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

உண்மை ஊமைதான். ஆனால் அது பேச ஆரம்பித்தால் நிற்காது

— இங்கிலாந்துப் பழமொழி


# உதயன்

உண்மை - திடநம்பிக்கை - அறநெறி

இல, 15, 2 ஆவது ஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம் 12-02-1987 த.பெ.இல 23


## அந்தோ! உயர்ந்து செல்லும் மினிபஸ் கட்டணங்கள் !!

அரசாங்கம் வடபகுதி மீது எரிபொருள் தடை விதித்து அவர்களை வாட்டுகின்றது. வாழ்க்கையைச் சீரழிக்கின்றது ஏற்கனவே இருந்த இன்னல்களுடன் குடாநாட்டு மக்கள் புதிதாகப் பலமுனைக் கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியதாயிற்று.

எரிபொருள் தடை காரணமாக முளைத்த புதிய கஷ்டங்களில் போக்குவரத்தும் முக்கியமான ஒன்றாகும். மக்கள் தமது அன்றாட அலுவல்களைச் செய்வதற்குப் போக்குவரத்துப் பிரதானம்.

எத்தனை மாற்று வழிகளைக் கையாண்டாலும் நீண்ட தூரப் பயணங்கள், பொருள்களை இடத்துக்கு இடம் ஏற்றி இறக்குதல் ஆகியவை எரிபொருள் தடையால் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றன. வாகனப் போக்குவரத்துக்கு மாற்றான, சரியான, உகந்த வழிமுறைகள் அறிமுகமாகும் வரையாவது வாகனங்கள் முக்கிய சேவைகளில் ஈடுபட வேண்டிய தேவை உண்டு.

இந்த வகையில், நீண்டதூர பயணிகள் போக்குவரத்துச் சேவையும் மட்டுப் படுத்தப்பட்ட முறையிலாவது நடக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. கிராமப் பகுதிகளில் இருந்து நகரத்துக்கு நடப்பதும் நீண்ட தூர போக்குவரத்துச் சேவைகளே ஆகும்.

அந்தச் சேவைகளில் பலவற்றில், ஏன் முழுக்க முழுக்க, மினி பஸ்களே இப்போது ஈடுபட்டு வருகின்றன.

எரிபொருள்களைப் பெறுவதில் மினிபஸ் உரிமையாளர்கள் பல சிரமங்களை, கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள் என்பது உண்மையே. மிக அதிக விலை கொடுத்தே அவர்கள் எரிபொருள்களை வாங்குகிறார்கள் என்பதையும் மறுப்பதற்கில்லை. இந்தக் கஷ்டமான சூழ்நிலையிலும் அவர்கள் தமது வாகனங்களைச் சேவையில் ஈடுபடுத்துவதற்காக உரிமையாளர்களைப் பாராட்ட வேண்டும். அதற்காகப் பொதுமக்கள் அவர்களுக்கு நன்றி உடையவர்களாக இருக்க வேண்டும்.

மினிபஸ் பஸ் சேவை ஒரு பொதுச்சேவையாகும். மக்களுக்குச் செய்யப்படும் நற்சேவையாகும். அதற்காக மினிபஸ் சொந்தக்காரர்கள் கைநட்டத்துடன் தமது சேவையை நடத்த வேண்டும் என்று எவரும் எதிர்பார்க்க முடியாது.

அதேவேளை எரிபொருள் தட்டுப்பாட்டைப் பயன்படுத்தி கட்டணங்களை நாளாந்தம் உயர்த்துவதும், தரப்படுத்தலற்ற ரீதியில், கண்ட கண்ட மாதிரிக் கட்டணங்களை அறவிடுவதும் தவிர்க்கப்பட வேண்டும். உச்சக் கட்டணங்களை அறவிடுவது தமது சொந்த மக்களுக்குத் தாம் செய்யும் பெரும் துரோகம் என்பதை மினிபஸ் சொந்தக்காரர்கள் உணருதல் அவசியம்.

அனேகமாக ஒரே அளவு தூரம் உள்ள இடங்களுக்கு வெவ்வேறு கட்டணங்கள் அறவிடப்படும் ஒருசீரற்ற நிலைமை நிச்சயம் நீக்கப்பட வேண்டும். மக்கள் மீது அளவுக்கு அதிகமான சுமையை ஏற்றுவது ஆகாது.

சேவைகளை ஆகக் குறைந்த அளவுக்கு மேலும் மட்டுப்படுத்தியாவது ஒருசீரான, நியாயமான கட்டணங்களை அறவிட வழி செய்யப்படுதல் வேண்டும்.

ஒவ்வொரு பகுதி மினி பஸ் உரிமையாளர்கள் சங்கமும் ஒவ்வொரு கட்டணத்தை அறவிடுவதை நிறுத்த வேண்டும். குடாநாட்டின் எல்லாப் பகுதிகளிலும் உள்ள மினிபஸ் உரிமையாளர் சங்கங்கள் இது விடயத்தில் இணைந்து பேசிக் கட்டணங்களை நிர்ணயிக்க வேண்டும்.

இதேவேளை, குடாநாட்டுக்குள் வந்து சேரும் எரிபொருள்களை அதிகமான விலைக்கு விற்கப்படாமல் உறுதி செய்யின், மினிபஸ் உரிமையாளர்கள் நாளுக்கு நாள் கட்டணங்களை உயர்த்துவதைத் தவிர்க்க மேலும் ஏதுவாகும்.

எரிபொருள் விலையைச் சீராக்குவதற்குத் தகுந்த கண்காணிப்பு நிச்சயம் தேவைப்படுகிறது. குடாநாட்டுக்குள் வந்து சேரும் எரிபொருள் – பயணிகள் போக்குவரத்து மற்றும் அத்தியாவசிய போக்குவரத்துச் சேவைக்காவது நியாய விலையில் கிடைக்க வழி செய்யப்பட வேண்டும்.

இப்போது எரிபொருளை இங்கு கொண்டு வந்து சேர்ப்போர், மனச் சாட்சியுடன், மக்கள் பற்றுடன் தாமாகவே நியாய விலையில் விற்க முன்வர வேண்டும். இல்லையேல் விடுதலை இயக்கங்கள்தான் அவர்களைக் கண்காணிக்க வேண்டிய கட்டம் வரும். அதனை விட வேறு வழி இருக்காது அல்லவா?

## உயர்பீட உத்தரவுகளை ஒழுங்காக நிறைவேற்றியவர் போராளிக்கு அஞ்சலி!

கன்னாகம், பெப்.12

தமிழீழ விடுதலைக்காக உழைத்த உன்னத போராளி என்பதற்காக மாத்திரமல்ல உயர்பீடம் வழங்கிய கட்டளைகளை ஒழுக்கத்துடனும் கடமையுணர்வுடனும் ஏற்றுச் செய்து முடித்த மாவீரன் என்பதற்காகவும் லெப்டினன்ட் யூரன் மாமாவுக்கு இன்று ஆயிரக்கணக்கான மக்கள் கண்ணீர் நிறைந்த கண்களுடன் அஞ்சலி செய்கின்றனர்.

விடுதலைப் புலிகளின் கன்னாகம் பிரதேசப் பொறுப்பாளர் திரு கதன் இவ்வாறு குறிப்பிட்டார்.

மன்னாரில் வீர மரணமடைந்த கன்னாகம் மயிலணியைச் சேர்ந்த ஜெயா (யூரன் மாமா) வுக்கு அஞ்சலி செலுத்

(4ஆம் பக்கம் பார்க்க)

# விசாரணைக்குழு முன் ஆஜராக பர்னாலா மறுப்பு

### ஆளும் கட்சியான அகாலிதள் முழு ஆதரவு

சண்டிகார், பெப் 11

சீக்கிய மதத்தலைமைக் குருமாரின் உத்தரவை ஏற்று ஒழுங்கு விசாரணைக் கமிட்டி முன் ஆஜராக பஞ்சாப் முதலமைச்சர் பர்னாலா மறுத்து விட்டார்.

பர்னாலா தலைமையிலான அகாலிதள் கட்சி சட்டசபைக்குழு, பர்னாலாவுக்கு இது சம்பந்தமாக ஆதரவை வழங்கியுள்ளது.

முதலமைச்சர் பதவியைத் துறக்கும்படி சீக்கிய மதத்தலைமைக் குருமார் திரு பர்னாலாவுக்கு உத்தரவிட்டிருந்தனர்.

அந்த உத்தரவுக்குப் பணிய முதலமைச்சர் மறுத்து விட்டார்.

இந்த மறுப்பை மதக் குற்றம் என்று தலைமைக் குருமார் பிரகடனப் படுத்தி உள்ளனர்.

தலைமைக் குருமார் முன் தெரிய முதலமைச்சர் மறுப்புத் தெரிவித்ததை துணிச்சலான, உறுதியான நடவடிக்கை என்று இந்திய அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இனி சீக்கியத் தலைமைப் பீடம் என்ன செய்யப் போகின்றது? இக் கேள்விதான் அரசியல் வட்டாரங்களில் எழுந்து உள்ளது.

பெரும்பாலும் சீக்கிய மதத்தில் இருந்து முதலமைச்சர் பர்னாலாவை தலைமைக் குருமார் வெளியேற்றி விடுவர் என்று நம்பப்படுகிறது. (இ-எ)

### வெளி உலகில்

### முன்னாள் அமெரிக்க அதிகாரி தற்கொலை முயற்சி

வாஷிங்டன், பெப் 11

ஈரானுக்கு ஆயுதம் விற்ற விவகாரத்தில் முக்கிய பங்கு வகித்த முன்னாள் அமெரிக்க தேசிய பாதுகாப்புச் சபை ஆலோசகரான ரொபர்ட் மக்பார்லின் கடந்த திங்கள் காலை தற்கொலை செய்ய முயன்றதாக அறிவிக்கப்பட்டது.

மனைவியின் தகவலைத் தொடர்ந்து மயக்க நிலையில் வீட்டில் காணப்பட்ட மக்பார்லினை அதிகாரிகள் வாஷிங்டன் கடற்படை ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர்.

20 முதல் 30 வரை வேலியம் குளிகைகளை இவர் உட்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்கொலை செய்ய முயற்சித்ததாக அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (இ-எ)

### நாடு கடத்த அமெரிக்கா திட்டம்

வாஷிங்டன், பெப் 11

சர்வதேச பயங்கரவாத இயக்கத்துடன் தொடர்புடையவர்களை அடையாளங்கண்டு நாடு கடத்தும் திட்டம் ஒன்றை அமுல் நடத்துவது பற்றி அமெரிக்க அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்து வருகின்றது.

இது சம்பந்தமான சட்ட திட்டங்களைத் தயாரிப்பதுபற்றிய விஷயங்களில் அரசு அதிகாரிகள் அக்கறை செலுத்தி வருவதாக அமெரிக்கப்பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ-எ)

### ஆசன பதிவுக்கு கம்பியூட்டர்

சென்னை, பெப் 11

இந்தியாவிலேயே முதல் முறையாக ஆசனங்களைப் பதிவு செய்யும் கம்பியூட்டர் முறையை தமிழ் நாட்டில் உள்ள திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் கொண்டு வர உள்ளது.

புதிய முறை ஏப்ரல் தொடக்கம் நடைமுறைக்கு வரும்.

திருச்சி மதுரை, திருநெல்வேலி, நாகர்கோயில், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் கம்பியூட்டர் ஆசனப் பதிவுத் திட்டம் முதலில் அமுலுக்குக் கொண்டு வரப்படும். (இ-எ)

### பணயக் கைதிகளை விடுவிக்க இரகசிய பேச்சு ஆரம்பம்

பெய்ரூட், பெப்.11

பணயக் கைதிகளான நான்கு பேராசிரியர்களையும் விடுவிக்கும் இரகசியப் பேச்சுக்கள் இஸ்ரவேலுடன் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக லெபனானில் உள்ள வானொலிகள் செய்தி வெளியிட்டுள்ளன.

பலஸ்தீன விடுதலைக்காகப் போராடும் இஸ்லாமிய ஜிஹாத் இயக்கமே இந்த நான்கு பேராசிரியர்களையும் கடத்தி பணயக் கைதிகளாக வைத்து இருக்கிறது.

400 அரபுக் கைதிகளை இஸ்ரவேல் விடுவிக்காது விட்டால் 4 பேராசிரியர்களையும் திங்கள் நள்ளிரவு கொல்லப்போவதாக கடத்தல்காரர்கள் அறிவித்தனர்.

பணயக் கைதிகளான பேராசிரியர்களில் ஒருவர் இந்தியர். அவரை விடுவிக்கும் முயற்சியில் இந்தியா நட்புநாடு ஒன்றின் உதவியை நாடியுள்ளது.

இதனிடையில் இஸ்ரவேல் 400 அரபுக் கைதிகளை விடுவிக்குமானால் தனது பணயக்கைதியாக இருக்கும் இஸ்ரேலிய விமானி ஒருவரை விடுவிக்கத் தயார் என்ற இன்னொரு பலஸ்தீன கெரில்லா இயக்கம் அறிவித்து உள்ளது. (இ-ஈ)

### 14பேர் மரணம்

மணிலா, பெப்.11

60நாள் யுத்த நிறுத்தம் காலாவதியான பின்னர் பிலிப்பீன்ஸ் அரசப் படையினருக்கும் கம்யூனிஸ்ட் கிளர்ச்சியாளருக்கும் இடையே நடந்த முதலாவது பெருமோதலில் 14 பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது. (இ எ)

## தென் ஆபிரிக்க சிறைகளில் கறுப்பர் உண்ணாவிரதம்

கேப்டவுன், பெப். 11

தென் ஆபிரிக்காவின் சிறைகளில் அடைக்கப் பட்டிருக்கும் கறுப்பு இன அரசியல் வாதிகள், தொண்டர்கள் பரவலாக உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

சுமார் பதினைந்தாயிரம் அரசியல் கைதிகள் உண்ணாவிரதத்திற் பங்கு பற்றி வருகின்றனர்.

இப்படி தென் ஆபிரிக்க வெள்ளை இன அரசின் நீதியமைச்சர் நாடாளுமன்றத்தில் அறிவித்தார். சிறையில் அடைக்கப் பட்டிருக்கும் 11 — 15 வயதுக்குட்பட்ட 250 சிறுவர்களை விடுதலை செய்வது அண்மையில் சாத்தியமாகாது என்றும் நீதி அமைச்சர் அறிவித்தார்.

சிறைகளில் அரசியல் கைதிகள் வன்செயலில் ஈடுபடுகின்றனர். இதை அடக்க 20 சந்தர்ப்பங்களில் கண்ணீர்ப் புகைக் குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் அறிவித்தார்

இதனிடையில் அமெரிக்க அதிபர் றேகன் நியமித்த குழு ஒன்று, தென் ஆபிரிக்கா மீது உலகநாடுகள் அனைத்தும் பொருளாதார த் தடை விதிக்கும் திட்டம் ஒன்றைத் தயாரித்துச் செயல் படுத்த வேண்டும் என்று ஆலோசனை கூறியுள்ளது. (இ-எ)

### செய்திக்கொத்து

### வரியிறுப்பாளர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப் 12

மானிப்பாய்ப் பட்டின வரியிறுப்பாளர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை (14.2.87) காலை 10 மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெறும்.

திரு என். பூரணலிங்கம் தலைமை வகிப்பார்.

சங்கத்தின் ஆண்டறிக்கையில், கடந்த கால நடவடிக்கைகள் விவரிக்கப்பட்டுள்ளன. (இ-எ)

### முருகனுக்கு ஆலயம்

சாவகச்சேரி, பெப் 12

சாவகச்சேரி நுணாவில் மேற்கு தாளையம்பதி ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் பரிவார மூர்த்தியாகிய ஸ்ரீ முருகப் பெருமானுக்கு ஆலயம் அமைக்கும் பணி நடைபெற இருக்கிறது.

இதற்கான அடிக்கல் நடப்பட்டுள்ளது.

இக்கல் நடும் வைபவத்தை பிரதிஷ்டா பூஷணம் சிவாகம ஞானசேகரம் சிவஸ்ரீ சோமசுந்தரக் குருக்கள் முன்நின்று நடத்தி வைத்தார். (இ-31)

### சுன்னாகத்தில் கூட்டுறவுக் கருத்தரங்கு

கன்னாகம், பெப். 12

கூட்டுறவாளர் கருத்தரங்கு ஒன்றை சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 3 மணிக்கு நடத்த உள்ளனர்.

கன்னாகம் புனித அந்தோனியார் ஆலய முன்றலில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்குக்கு இலங்கை இரண்டின் தலைவர் திரு. எஸ். யோகானந்தராசா தலைமை வகிப்பர்.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. சி. குமரவேல், சுன்னாகம் பங்குத்தந்தை அருட்திரு யோகராசா அடிகளார் உட்பட பலர் கருத்துரை வழங்குவர். (இ-27)

### வரணிக்கு ஆனல்ட்

கொடிகாமம், பெப் 12

வரணி இதிஸ்... திருச்சபைப் போதகர் வண. எம். இராஜகுலேந்திரன் வெளிநாடு செல்வதை முன்னிட்டு சாவகச்சேரி திருச்சபை போதகர் வண. எஸ்லி ஆனல்ட் வரணி திருச்சபைக்கு போதகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பண்டத்தரிப்பு திருச்சபையிலிருந்து வண. சாம் தம்பு சாவகச்சேரி திருச்சபை போதகராக நியமனம் பெற்றதுடன் மே மாதம் வரை நுணாவில் திருச்சபைச் சேவையையும் செய்யுமாறு பணிக்கப்பட்டுள்ளார். (இ-75)

### சைவசமய அறிவுப் பரீட்சை

வட்டுக்கோட்டை, பெப் 12

யாழ்ப்பாணம்சாந்தை யச்மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகத்தினரால் யாழ் மாவட்டரீதியில்நடத்தப்படும் சைவசமய அறிவுப் பரீட்சை நாளை 13-ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறும். (இ-11)

### தமிழ் எழுத்தாளருக்கு காலியில் கௌரவம்

கொழும்பு, பெப் .12

"எனது நோக்கில் இலங்கைப் பாராளு மன்றம்" எனும் நூலை அண்மையில் வெளியிட்டவரும் பாராளுமன்ற சிரேஷ்ட அறிக்கை யாளருமான திரு. செல்லப்பா நடராசாவைக் காலியில் உள்ள முஸ்லிம்கள் கௌரவிக்க உள்ளனர்.

நாளை போயா தினத்தன்று திரு. நடராசாவின் நூல் அறிமுக விழா காலியில் நடைபெற இருக்கின்றது.

அந்த விழாவில் திரு. நடராசா கௌரவிக்கப்பட உள்ளார். முன்னாள் வட்டாரக் கல்வி அதிகாரியும், காலி மல்ஹருஸ் ஸுல்ஹிய்யா மத்திய மகா வித்தியாலய அதிபருமான ஜனாப் எம். எஸ் அப்துல் மஜீத் மேற்படி விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார். (அ)

### சமய சந்நிதிகளில்

### அராலியில் தைப்பூச விழா

யாழ்ப்பாணம், பெப். 12

அராலி மேற்கு கோட்டைக்காடு தெரியவளை அம்மன் கோவில் தைப்பூசவிழா இன்று நடைபெறும்.

ஜி. ஜி. லக்ஷ்மிநாராயணன், சுவாமிஜீயின் 'குசேலர் அவல்' கதாப் பிரசங்கமும், மேளக்கச்சேரியும் இடம்பெறவுள்ளன.

### பல்கலைக் கழகத்தில் தீட்சை

யாழ்ப்பாணம், பெப். 12

யாழ் பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலயத்தில் தைப் பூச விழாவையொட்டி இன்று காலை 9 மணிக்கு சமய தீட்சை வழங்கப் படவுள்ளது.

ஆலயகுரு பிரம்மஸ்ரீ மு. கனகசபாபதிக் குருக்கள் இதனை நடத்தி வைப்பார். (ஓ)

# சமய தீட்சைக்கு உகந்த தைப்பூசம்

**த. காசிநாதன்**

இன்று தைப்பூசத் தினமாகும்.

தை மாதத்தில் பூச நட்சத்திரம் வரும் நாள் தைப்பூசத் திருநாளாகும். இந்நாள் சைவ மக்களால் புண்ணிய நாளாகக் கொண்டாடப்படுகின்றது. தைப்பூச நாள் பெரும்பாலும் நிறைமதி நாளாக இருக்கும். தை மாதத்தில் பௌர்ணமி சேரும் பூச நாள் மிகவும் விசேஷமானது இந்நன்னாளில் புண்ணிய நதியில் நீராடினால் மிகுந்த புண்ணியம் உண்டாகும்

தந்தைக்கு ஞான உபதேசம் அருளிச் செய்த வும்முருகன், தமது வாகனமான ஓங்கார மயில் மீது ஏறி உலகை வலம் வந்து, வெற்றிப் பெருமிதத்துடன் தன் தந்தையாகிய சிவனிடம் மாம்பழம் பெறுவதற்கு ஆவலுடன் சென்ற பொழுது தன் அண்ணன் கஜமுகன் கையில் மாம்பழத்தை வைத்துக் கொண்டு நிற்பதைக் கண்டு சினங் கொண்டு ஆண்டியாகிப் பழனிமலைக்குச் சென்ற நாள் தைப்பூசநாள் என்பதாகக் கூறப்படுகின்றது.

திருவண்ணாமலை கார்த்திகைத் தீப தரிசனத்துக்கு எவ்வாறு சிறந்து விளங்குகின்றதோ, அதே போல பழனிமலை தைப் பூச வழிபாட்டிற்குச் சிறப்பாக அமைந்திருக்கின்றது

ஈழத்தில் இத்தைப்பூச விழாவானது சிறப்பாக முருகன் ஆலயங்களிலும் மற்றும் அம்மன் கோயில்களிலும் பக்தி சிரத்தையுடன் ... பட்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கதாகும். குறிப்பாக நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் தைப்பூச நன்னாள் பெருவிழாவாகக் கொண்டாடப்படுகின்றது.

தைப்பூசத் திருநாளிலே, தீட்சை வைத்தல், காது, மூக்கில் துவாரமிட்டு, முறையே காதணி, மூக்குத்தி முதலியன அணிதல், மாட்டிற்குக் குறி சுடுதல், நாணயம் போடுதல் போன்ற நல்ல நாட்காரியங்களைச் சைவமக்கள் செய்வதை நாம் அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

''திருநீறு இட்டு ஆர் கெட்டார், சிவனை மறந்து ஆர் உய்ந்தார்'' என்பது முதுமொழி. கூன் பாண்டியனது வெப்பு நோயை திருநீற்றினால் தீர்த்தருளினார் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்.

திருநீறு கொண்டு அளப்பரியது. தீட்சை என்பது கொடுப்பதும் கெடுப்பதும் எனப் பொருள்படும். மலங்களைக் கெடுத்து ஞானம் கொடுப்பது தீட்சையாகும்.

தீட்சை பெற்றுச் சைவ சமயத்தில் புகுதல் இத் திருநாளில் ஒரு சிறப்பான அம்சமாகும்.

எனவே, சமயதீட்சையாகிய சிவதீட்சை பெற்று ஒவ்வொரு நாளும் திருநீறுகொண்டு அநுட்டானம் செய்து வந்தால் அதன் பலன்

இவ்வகையில் தைப்பூச விழா சைவர்களது ஆத்மீக வாழ்க்கையை வளம்படுத்தும் சமயத்திருநாளாக விளங்குவது தெளிவாகின்றது. அத்துடன் சமய விழாக்களை கொண்டாடுவதனால் பெறப்படும் சமய விழிப்புணர்வு தனிமனித நிலையில் மட்டுமன்றி சமுதாயத்தின் நலனுக்கும் துணைசெய்யும் வகையில் விரிவடைவதும் குறிப்பிடத்தக்கதாகும். ✱

## மனக்கணித அறிவு குறைந்து வருகிறது

### பயிற்சிக் கூட்டத்தில் உரை

வட்டுக்கோட்டை, பெப்.12

இக்காலப் பிள்ளைகளுக்கு மனக்கணித அறிவு மிகக்குறைவு. இவர்களிடம் மனக்கணித அறிவை ஏற்படுத்தும் வகையில் மனக்கணித அறிவோடு தொடர்பான கணக்குகளைக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் இக்கால மாணவர்கள் மனக்கணித அறிவை விருத்தியாக்கிக் கொள்வார்கள்.

வட்டுக்கோட்டை வட்டாரத்திலுள்ள பாடசாலைகளில் ஆறாம் ஆண்டில் கணிதபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சிக்கூட்டம் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெற்றது அதில் உரையாற்றிய கணித பாட ஆசிரிய ஆலோசகர் திரு.கே. நடராசா மேற்கண்டவாறு கூறினார்

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

மாணவர்கள் அடிப்படை அறிவு இல்லாமையினாலேயே ஜி.சி.ஈ வகுப்புகளில் சித்தியடையத் தவறுகிறார்கள். ஆசிரியர்கள் ஆரம்ப வகுப்புகளிலே அதிகம் கவனஞ் செலுத்தவேண்டும்.

மாணவர்களுக்குவகுப்புகளில் போதியளவு வேலை கொடுக்கவேண்டும்.

மாணவர்கள் எவ்வளவுக் கெவ்வளவு கணக்குகளை வகுப்புகளில் செய்கிறார்களோ அவ்வளவுக்கு அவர்களுக்கு நன்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### பொய்யாமொழி



குறள்:

அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க் கியல்பு.

பொருள்:

அஞ்சாமை, ஈகை, அறிவுடைமை, ஊக்கமுடைமை ஆகிய இந்த நான்கு பண்புகளும் குறைவுபடாமல் இருத்தலே அரசனுக்கு இயல்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Bitsmans Institutes**
MANIPAY
A/L 87 கலை, வர்த்தக வினா - விடை
வருப்புக்கள்

| | |
|---|---|
| பொருளியல்: | சின்னத்தம்பி |
| வர்த்தகம்: | தேவா |
| கணக்கியல்: | இராஜன் |
| அளவையியல்: | S. S. மனோகரன் |
| தமிழ்-இந்து நாகரிகம்: | பாலா |
| அரசியல்: | ஜெயராஜா |

ஆரம்பம்: 12-02-87 வெள்ளி 10.00 a.m.



# உதயன்

12 - 02 - 1987 வியாழக்கிழமை



**Bitsmans Institutes**
MANIPAY
A/L 87
விஞ்ஞான வினா — விடை
வகுப்புக்கள்

| | |
|---|---|
| பௌதிகவியல்: | சௌந்தி - வியா 4-30, வெள்ளி 3-30 |
| இரசாயனவியல்: | மகனி - புதன் 3-30, ஞாயிறு 5 00 |
| விலங்கியல்: | ஈசன் - திங்கள் - புதன் 2-30 |
| தாவரவியல்: | நேசன் - செவ்வாய், வெள்ளி 4-30 |

ஆரம்பம்: 12-02-87 வெள்ளி 3-30 p.m.


## விசித்திரம்

என்ன முரளி, அவசரமாய் ஓடுகிறீர்? ஏன் ஷெல் கில் அடிக்கினமே! அப்பிடி எண்டாப்போலை ஓடி என்ன பிரயோசனம். நீ ஓடவும் மாட்டாய் எண்டது எனக்குத் தெரியும்.

உதுதான் விடிஞ்சால் பொழுதுபட்டால் 24 மணி நேரமும் சக்குச் சக்கு எண்டு எப்பவும் அடிச்சுக்கொண்டு இருக்கினம்.

ஓ, கிழக்கை வெண்டவினைன் இப்ப வடக்கையும் பிடிக்கப் பார்கிற திட்டத்தில ஒரு அம்சம்தான் உந்த அடியள், முன்னேற்றங்கள் எல்லாம்!

நாங்கள் இழந்த பிரதேசத்துக்காகப் போராடுகிறம். அவையும் எங்களிட்டை இழந்த பிரதேசத்தைப் பிடிக்கப் போராடுகினம். இரண்டும் இழந்த மண் மீட்கும் போராட்டங்கள் தான்!

மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவிலை எக்கச்சக்கமாய் முன்னேறி விட்டதாய் வானொலி, ரி. வி. எல்லாம் வெரிதாய் பீத்துதுகள்.

சொல்லுறதில ஒரு பங்கு உண்மையாய் இருக்குமோ எண்டது ஐமிச்சம். மூண்டு மாவட்டங்களில ஊரடங்கு போட்டதில விஷயம் இல்லாமல் இல்லை. மூண்டு கொக்கட்டிச் சோலையள் அங்கை அவை அமைச்சராலும் ஆச்சரியப்படுகிறதுக்கு இல்லை!

கிளிநொச்சியாலை வாகனம் வரக்கூடாது எண்டு சொல்லியுக்லை 'அந்த என்னத்துக்கோ ஆயத்தப்படுத்துகினம் எண்டு நினைச்சன், அது சரியாய்ப் போச்சு.

அடுத்த ஊரடங்கு சிலவேளை யாழ்ப்பாணமோ எண்டு நண்பர் ஒருவர் கேட்டார். ஓ, அவர் வடக்கைப் பிடிக்கிற ஆசையில எதையும் செய்யலாம்!

தாங்கள் நடத்திற தாக்குதல்களுக்கு இப்ப அவர் புது வியாக்கியானம் எல்லே குடுக்கிறார் புலியளோடை பேச்சுவார்த்தை மேசைக்கு அழைக்கத்தானும் உந்தத் தாக்குதல்கள் எல்லாம்!

உலகத்தில உப்பிடி ஒரு அரசியல் தந்திரம், ராஜதந்திரம் கண்டதில்லை, கேட்டதில்லை.

அம்பாறை அரந்தலாவச் சம்பவ வீடியோவை வெளிநாட்டுச் செய்தியாளர்களுக்குக் கொழும்பிலை போட்டுக் காட்டினமாம். உள்நாட்டுச் செய்தியாளர்களுக்கு அந்த வாய்ப்பு இருக்கவில்லையாம்.

ஏனெண்டா, அவை அரசாங்கத்துக்குப்பாதகமாய் கயிறு குடுத்தாலும் குடுத்துவிடுவினமோ எண்ட பயம்!

தெற்கில மூவாயிரம் பேரைக் கைது செய்து வைச்சிருக்கினமாம். இனக்கலவரம் வெடிக்கிறதைத் தடுக்கவாம்! ஆரிட்டை சொல்லிச் சிரிக்கிறது எண்டு தெரியவில்லை அரசாங்கம் செய்யிற இனக்கலவரத்தை விடவே அங்கத்தைச் சனம் இனக்கலவரம் செய்யப்போகுதுகள்?

ஓ. பாரேன் மலைநாட்டில தெரியா ஒரு பூகம்பம் வெடிக்கப் போகுது. தொண்டமான் போர்க்கோலம் பூண்டிருக்கிறார். மலையக இளைஞர் கைது நிற்காவிட்டால் மலையகம் யாழ்பாணம் ஆகும் எண்டு எச்சரிச்சிருக்கிறார்.

பாப்போம் உவர் அச்சாணியார் தொண்டமானுடைய யாரிக்கு நிண்டு போர்புரிவாரோ எண்டு! எல்லாம் நல்லதுக்குத்தான் எண்டு நான் அடிக்கடி சொல்லுறதை ஞாபகத்தில் வைத்திரு!

கொண்டோடி

# குறிப்பிட்ட இடம் ஒன்றில் வசிக்க நிர்ப்பந்திப்பது

## அடிப்படை உரிமையை மீறிய செயல்

## உயர் நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு, பெப் 12

ஒரு பிரசையை குறிப்பிட்ட இடம் ஒன்றில் வசிக்கும்படி நிர்ப்பந்திப்பது அரசமைப்புச் சட்டத்தில் கூறப்பட்ட அடிப்படை உரிமைகளை மீறிய செயலாகும்

இப்படி உயர் நீதிமன்றம் கடந்த திங்கட்கிழமை தீர்ப்பளித்தது.

குசுமாவதி என்ற பெண் செய்த முறைப்பாட்டை ஏற்று உயர் நீதிமன்றம் இத் தீர்ப்பை வழங்கியது.

மூதூர், நீலாப்பளை கிராமத்தில் தீவிரவாதிகளின் தாக்குதல்களில் உயிர் தப்பிய குசுமாவதி தனது சொந்த இடமான அம்பலாந்தோட்டைக்கு இடம் பெயர்ந்தார்

ஆனால் அரசு அதிகாரிகள் அவரை பொலீஸாரைக் கொண்டு நீலாப்பளையில் மீண்டும் போய்க் குடியேறும்படி நிர்ப்பந்தித்தனர்

''எங்கு போய்க் குடியேறுவது என்பதைத் தீர்மானிக்கும் உரிமை நாட்டின் ஒவ்வொரு பிரசைக்கும் உண்டு. குறிப்பிட்ட இடத்தில் தான் குடியேற வேண்டும் என்று அரசு அதிகாரிகள் நிர்ப்பந்தம் செய்ய முடியாது.

அப்படி நிர்ப்பந்தம் செய்வது அரசமைப்புச் சட்டத்தின் 14 ஆவது ஷரத்தின் கீழ் அடிப்படை உரிமையை மீறிய செயலாகும்''

இப்படி குசுமாவதி உயர் நீதிமன்றத்துக்கு முறையிட்டிருந்தார்.

அதை ஏற்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது

''முறைப்பாட்டுக்காரப் பெண்ணுக்கு 7,500 ரூபா நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும், நீதிமன்றச் செலவாக குசுமாவதிக்கு 150 ரூபா வழங்க வேண்டும்'' இப்படி உயர் நீதிமன்றம் மேலும் தீர்ப்பளித்தது.

பெண்ணின் சார்பில் இலவச சட்ட உதவித் திட்டத்தின் கீழ் டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வா வாதாடினார்.

(இ-ஏ)

## பல்கலைக்கழக மாணவர் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப் 12

தற்போதுள்ள போக்குவரத்துச் சிரமங்களால், தமது விரிவுரைகளுக்குச் செல்ல முடியாதுள்ள யாழ் மாவட்ட பேராதனை பல்கலைக்கழக மாணவர்களுக்கு இன்று வியாழன் யாழ் பல்கலைக் கழகத்தில் ஒரு கூட்டம் நடைபெறுகிறது.

இன்று நண்பகல் 12 மணிமுதல் 1 மணி வரை நடைபெறவுள்ள இக்கூட்டத்திற்கு சகல மாணவர்களும் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்

(இ-5)

## மனக் கணித...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

மையுண்டு

இப்படி அவர் கூறினார்

ஆரம்ப வகுப்பு ஆசிரிய ஆலோசகர் திருமதி முருகையா கணிதபாடத்திற்கான பாடத்திட்டம் பற்றிய விளக்கத்தைக் கூறினார்.

விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகர் திரு. எஸ். நடராசா பல் தேர்வு வினாக்கள் பற்றி விளக்கினார். (இ-161)

## பரந்தனில் நேற்று...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யம் விளைவிக்காத முறையில் அவற்றை அகற்ற வேண்டியுள்ளது.

அதனால் தான் மூன்று மாவட்டங்களிலும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதாகக் கூட்டுப்படைத் தலைமையலுவலகம் தெரிவித்ததாக நேற்று பி பி சி வானொலி அறிவித்தது.

பரந்தனில் இராணுவத்திற்கும் போராளிகளுக்கும் இடையில் இடம் பெற்ற உக்கிர மோதல் நேற்று (புதன் கிழமை) இரண்டாவது நாளும் தொடர்ந்து நடந்தது. கிளிநொச்சி, ஆனையிறவு ஆகிய இராணுவமுகாம்களில் இருந்து தொடர்ச்சியாக ஷெல்தாக்குதல்கள் பரந்தனை நோக்கி மேற்கொள்ளப்பட்டன. பரந்தன் ஒரேபுகை மண்டலமாக இருந்தது கிளிநொச்சி இராணுவமுகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் தாக்குதலினால் பரந்தனில் உள்ள வியாபாரநிலையம் தீப்பற்றியுள்ளது. மற்றும் பல பொதுமக்கள் ஷெல் தாக்குதலினால் காயமடைந்துள்ளனர். சிலர் பளை, சாவகச்சேரி, யாழ்ப்பாணம் ஆகிய வைத்தியசாலைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

இதேவேளை ஆயிரத்துக்கும் அதிகமான சிப்பாய்கள் பரந்தன் வங்கிக் கட்டடத்திலும், தபாற் கந்தோர் கட்டடத்திலும் முகாம் அமைத்துள்ளனர் என்று பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்திலும் முகாம் அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது

கிளிநொச்சி, உருத்திரபுரம் பகுதிகளில் நடைபெற்ற சிப்பாய்கள் புலிகள் மோதலையடுத்து நேற்று முன்தினம் ஆயிரக் கணக்கான சிப்பாய்கள் பரந்தன் பகுதியை முற்றுகையிட முயன்று கொண்டிருந்தனர்.

இதனை எதிர்த்து விடுதலைப் புலிகளும் பெரும் தாக்குதல் நடத்தினர். குண்டுவீச்சு விமானங்களும் தாக்குதல் நடத்தின.

வீதிகளில் ரோந்து

பரந்தன் முல்லைத்தீவு வீதியிலும், பரந்தன் கிளிநொச்சி வீதியிலும் ஆயிரத்துக்கும் அதிகமான சிப்பாய்கள் ரோந்துப் பணியை மேற்கொண்டுள்ளனர்.

குண்டு வீச்சுத் தாக்குதல்களினாலும், ஷெல் தாக்குதல்களினாலும் பரந்தன் வயல்வெளியில் உள்ள நெற்குடுகள் மீது தீப்பிடித்து எரிவதாகவும் கூறப்படுகிறது

தொடர்ந்து நடைபெற்றுவரும் மோதல்கள் காரணமாக போக்குவரத்துக்கள் பெரும் ஸ்தம்பிதநிலையை அடைந்துள்ளன.

பரந்தன் பகுதிகளில் இருந்து ஏற்கனவே பொதுமக்கள் குடிபெயர்ந்து விட்டதன் காரணமாக பொதுமக்களுக்கு உயிர்ச்சேதங்கள் அவ்வளவாக ஏற்படவில்லை

(அ-10-76)

## பயணிகள்--

(1ஆம் பக்க தொடர்ச்சி)

முன்னும் பின்னும் வந்த இரு பஸ்களும் பலத்த சேதமடைந்தன. எனினும் அவற்றில் பயணம் செய்தவர்கள் அனைவரும் அதிஷ்ட வசமாக காயமெதுவுமின்றித் தப்பினர். (த-10)

## உயர் பீட-----

(3ம் பக்கத் தொடர்ச்சி)

தும் கூட்டம் வளர்பிறை விளையாட்டுக் கழகத் தலைவர் திரு. அ. செல்வராசா தலைமையில் நடைபெற்றது

(இ-27)

## வேறு---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டார்.

இதேநேரம் அப்பகுதியால்வந்த 'ஜேர்மனி' மினிபஸ்மீதும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதில் பலத்த காயமடைந்த அல்வாய் வடக்கைச் சேர்ந்த முருகேசு என்பவரும் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டார்

துப்பாக்கிப் பிரயோகத்தில்நால்வரை இழந்த வி ஐ பி டஸ் தொடர்ந்தும் எரிந்துகொண்டிருப்பதாக நள்ளிரவிற்குப் பின் வந்த செய்திகள் தெரிவித்தன.

(ஒ-10)

## சைக்கிளில்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பற்றைக்குள் பதுங்கி இருந்த சிப்பாய்கள் இவர்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதனால் இவருக்கு வயிற்றில் காயம் ஏற்பட்டது.

மற்றொரு சம்பவத்தில் ஆறுமுகம் பத்மநாதன் (22 வயது) என்பவர் பூநகரிப் பகுதியில் இருந்து பரந்தன் நோக்கி சைக்கிளில் வந்த பொழுது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்.

மேற்படி சம்பவங்களில் காயமடைந்த இருவரும் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டனர். (இ-10)

## நகரில்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காரணமாக குடாநாட்டில் வாகனங்கள் ஓட முடியாத நிலையில் இருப்பதைக் காட்டு முகமாக மாட்டுவண்டிகளில் ஒலிபெருக்கிகள் கட்டப்பட்டு ஊர்வலத்தில் கொண்டு செல்லப்பட்டன.

ஊர்வலத்தின் முடிவில் யாழ் செயலக வாசலில் பொதுக் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது.

அதனை அடுத்து மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கத்தின் சார்பாகவும், குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கம் சார்பாகவும் இரண்டு மகஜர்கள் அரச அதிபரிடம் கையளிக்கப் பட்டன.

மகஜரைப் பெற்று கொண்ட அரச அதிபர் எரிபொருள் தடையை நீக்குவதற்கு தாம் உரிய நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.

(இ-10)

## லொறி---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ணமாக கீழே இறங்கி லொறியை தள்ள முற்பட்ட பொழுது சரமாரியாக துப்பாக்கிப்பிரயோகங்கள் மேற்கொள்ளப் பட்டன

இதனால் எனக்கு கையில் காயம் ஏற்பட்டது (இ-76-10)

## விடுதலைப்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் இயக்கத்தைச் சேர்ந்த 'வெள்ளை' (ஏ எம் நெல்சன் றெஜிநோல்ட் வயது 19 வெற்றிலைக்கேணி)

'அம்முலு' (ரி லிங்கம்) வயது 17 திருத்தணிகள் ஞகம்) ஆகியோரே மரணமானவர்கள் ஆவர்.

போராளிகள் இருவரதும் உடல்களை மீட்டு வந்த விடுதலைப் புலிகள் இறுதி மரியாதை செலுத்தி உறவினரிடம் ஒப்படைத்துப் பின் நல்லடக்கம் செய்தனர்

ஏழாலை வடக்கு, மல்லாகம் பகுதிகளில் கறுப்புக் கொடிகள்தோரணங்கள் கட்டி மக்கள் துக்கம் அனுஷ்டித்தனர்.

பகல் 10-30 மணி அளவில் பலாலியில் இருந்து தொடர்ச்சியாகத் துப்பாக்கி வேட்டுச்சத்தங்கள் மாலை வரைகேட்ட வண்ணமிருந்தன

பிற்பகல் 4-30மணிக்கு மேலும் இரண்டு மோட்டோர் ஷெல்கள் பலாலியில் இருந்து வயாவிளான் புதுறோட்டு சென்றிப் பகுதியை நோக்கி ஏவப்பட்டன. (இ-119)

## ஜெய்ப்பூர் கால் தொழிற்சாலைக்கான உதயன் - சஞ்சீவி உதவி நிதி

உதயன் - சஞ்சீவி ஆரம்பித்த ஜெய்ப்பூர் கால் தொழிற்சாலைக்கான உதவி நிதிக்கு வாசகர்களும், அபிமானிகளும் தாராளமான நன்கொடை வழங்கி வருகின்றார்கள். பலர் நேரில் வந்து தமது அன்பளிப்பைச் செலுத்துவதைக் காண மகிழ்ச்சியாக இருக்கிறது.

மேற்படி நிதிக்கு நன்கொடை வழங்கிய அன்பர்களின் (முதற் றொகுதி) பட்டியலைக் கீழே காணலாம்:-

| இல. | பெயர், முகவரி | ரூபா சதம் |
|---|---|---|
| 01 | திரு. வி. கே ஏரம்பமூர்த்தி, மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை. | 1,000-00 |
| 02 | திரு. வி இராசா, பிரதான புகையிரத நிலைய அதிபர், யாழ்ப்பாணம். | 111-11 |
| 03 | திரு. க. இ. தனேஸ்வரன், சந்தை ஒழுங்கை, ஆவரங்கால். | 51-00 |
| 04 | திருமதி வி ஜோசப், சரம்பன், ஊர்காவற்றுறை | 1,000-00 |
| 05 | திரு. க பாலேந்திரம், கொழும்புத்துறை, யாழ்பாணம். | 500-00 |
| 06 | திரு. அ சி நடராசா. அராலி மேற்கு, வட்டுக்கோட்டை. | 150-00 |
| 07 | திரு. V. S மருதலிங்கம், கனகசபை வீதி, மானிப்பாய். | 100-00 |
| 08 | திரு. ஈ. சரவணபவன், ஷ்ட்ரு நிதி நிறுவனம், யாழ்ப்பாணம். | 1,000-00 |
| 09 | திரு. P. மயில்வாகனம், சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி. | 500-00 |
| 10 | திரு வ கனகசபை, வில்லியம் ஹாவே ஞாபகார்த்த வைத்தியசாலை, சுண்டிக்குளி. | 1;100-00 |

## நீத்தார் பட்டியல்

### மலர்ராசனி கமலநாதன்

(ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, -பலாலி, 2ஆம் வருடம்)

இவர் கமலநாதன் (விவசாய போதனாசிரியர் பாண்டியன்குளம், முல்லைத்தீவு) அவர்களின் அன்பு மனைவியும், குமரையா (முன்னாள் மனேச்சர் ப. நோ. கூ சங்கம் நயினாதீவு) திருமதி மங்கையற்கரசி குமரையா ஆகியோரின் அருமை மகளும் வேலுப்பிள்ளை (போஸ்ட் மாஸ்ட்டர் யாழ்) தம்பதிகளின் பெருமைமிக்க மருமகளும், முருகதாஸ், இருஷ்ணதாஸ் (ப. நோ. கூ. சங்கம் நயினாதீவு) டாக்டர் பத்மாசினி (U K) கமலதாஸ் (உதயன் விநியோகப்பகுதி) இராமதாஸ் (U K) ஆகியோரின் பாசம் மிக்க சகோதரியும் அமிர்தசௌரி, சரஸ்வதிதேவி ஏகாந்தராசா (சொறியியலாளர் U K) ஆகியோரின் நேசம்மிக்க மைத்துனியுமாவர்.

தகனக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.


## பிரயாண ஒழுங்குகள்

சவூதி அரேபியா:- OPEN VISA

லிபியா:- எலெக்றிக் வெல்டிங், காஸ் வெல்டிங் அனுபவம் உள்ளவர்களுக்கு மட்டும்.

சிங்கப்பூர்:- கப்பலில் வேலை செய்வதற்கு விரும்புவோருக்கான பயண ஒழுங்குகள்

விபரங்களுக்கு கீழ்க் காணும் முகவரியில் உடன் தொடர்பு கொள்ளவும்.

**றை ஸ்ரார் றவல்ஸ்**
இல. 6, நவீன சந்தை மேல்மாடி
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 23831



★ புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பு -- இன்று 12-02 1987 ★

பகல் 11-00 மணியில் இருந்து 12-00 மணி வரையிலான சுபமுகூர்த்தத்தில்

யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 177 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள

★ தீபா ஜுவல்லறி ★

என்னும் வியாபார ஸ்தாபனத்தை ஆரம்பித்து நடத்தவிருப்பதால் அவ்வமயம் தாங்களும் சமுகம் தந்து சிறப்பிக்குமாறும் ஸ்தாபன வளர்ச்சிக்கு ஊக்குவிக்குமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

அசல் 22 கரட் தங்க நகைகளை ஓடர் பண்ணி பெற்றுக்கொள்ளலாம். ஓடர் நகைகள் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.

(177 கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.
வின்சர் திரையரங்கு, முன்பாக)

- தீபா ஜுவல்லறி ஸ்தாபனத்தார்



இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்ட திகதி 18 - 02 - 1987. தொலைபேசி இல. 24805, 22073.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane Power House Road, JAFFNA. Registerd as a Newspaper at the General Post office under QJ / 94 / N / 87 Tlephone 24805, 22073.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org